(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 105.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 சனவரி 23 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ ஜீவன் தொண்டமான்,** நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

**கௌரவ விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** நீதிமன்ற மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சனத் நிசாந்த**, நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜகத் புஷ்பகுமார,** வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லொஹான் ரத்வத்தே,** பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்,** உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ தேனுக விதானகமகே,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

**கௌரவ டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ கபில அதுகோரல**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல**

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சட்டத்தரணி சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ எச். நந்தசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸாந்தி

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார

கௌரவ சுதத் மஞ்சுல

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ மொஹமட் முஸம்மில்

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ நிபுண ரணவக

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ நயன வாசலதிலக

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

**கௌரவ திலிப் வெதஆரச்சி**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ கபீர் ஹஷீம்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** *சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—*

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'பயங்கரவாத எதிர்ப்பு' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**II**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**III**

"கௌரவ வேலுகுமார் மற்றும் 21 உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள எழுத்துமூலமான கோரிக்கையின் பேரில் 'இலங்கையின் மலையக தோட்ட சமூகத்தின் மேம்பாட்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியத்தை (Caucus for the Evolution of Malaiyaga Plantation Community in Sri Lanka)' பாராளுமன்ற அலுவல்கள் குழுக்களை தாபிப்பதற்காக 2024 ஜனவரி 12 ஆம் திகதி நடைபெற்ற அதன் குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதை இச்சபைக்கு அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான முதியோர்களுக்கான தேசிய சபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், வழிவகைகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் தொழில்நுட்ப அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற நிலையியற் கட்டளை 124(6) இன் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வழிவகைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பிரதமரின் அலுவலகம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2023 நவம்பர் 28 ஆம் திகதிய 2360/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து அக்கட்டளை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) கல்வி அமைச்சர்—

(i) 2021 ஆம் ஆண்டுக்கான திறன் மேம்பாட்டு நிதி லிமிடெட்டின் ஆண்டறிக்கை; மற்றும்

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அக்கட்டளை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) கல்வி அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான தலவாக்கலை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆண்டறிக்கைகளைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு மற்றும் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், சுற்றுலா அபிவிருத்தி பிரதேசங்களைப் பிரகடனப்படுத்துதல் தொடர்பில் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2023 செப்டெம்பர் 07 ஆம் திகதிய 2348/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்து அக்கட்டளை சுற்றுலாத்துறை மற்றும் காணி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் 53(1) ஆம் பிரிவின் கீழ் இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரைகளுடன், இலங்கை சுற்றுலாப் பயணத்துறை அபிவிருத்தி அதிசாரசபையின் தவிசாளரினால் விதிக்கப்பட்டு, 2023 செப்டெம்பர் 11 ஆம் திகதிய 2349/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை அனுமதித்து அச்சட்டத்தின் 53(6) ஆம் பிரிவின் கீழ் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரால் 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதிய 2354/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(13) மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான ஸ்ரீ லங்கா எனர்ஜிஸ் (பிரைவேட்) நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்—

- (i) 2021 ஆம் ஆண்டுக்கான லங்கா சதொச லிமிடட்டின் வருடாந்த அறிக்கை; மற்றும்
- (ii) 2022 ஆம் ஆண்டுக்கான பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

- (i) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை;
- (ii) 2022 ஆம் ஆண்டுக்கான திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை;
- (iii) 2020 ஆம் ஆண்டுக்கான இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை;
- (iv) 2022 ஆம் ஆண்டுக்கான நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்
- (v) 2017 ஆம் ஆண்டுகளுக்கான வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

- (i) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளைகள்; மற்றும்
- (ii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழான கட்டளை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ லலித் வர்ணகுமார அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

- (i) 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்
- (ii) 2021 ஆம் ஆண்டுக்கான டவர் மண்டப அரங்க மன்றத்தின் ஆண்டறிக்கையும் நிதிசார் கூற்றுக்களும்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ லலித் வர்ணகுமார அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 'நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம்' தொடர்பான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) நிகவரட்டிய, கொட்டவெஹெர, இஹல அம்பாலே எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.எம். முதியான்சே அத்தபத்துவினது 2023.10.19 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ டி.பீ. ஹேரத் சமர்ப்பித்தார்.

(2) கொட்டபொல, கல்தொல, மஹஹேன எனும் முகவரியில் வதியும் திரு. எம்.சீ. பிரசாத் குமாரவினது 2024.01.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ பிரசன்ன ரணவீர சமர்ப்பித்தார்.

(3) அம்பிட்டிய, தம்பவெல வீதி, 'இசுரு சந்தல்ல', இல. 50/22, எனும் முகவரியில் வதியும் திரு. பி.ஆர். பிரீதிகுமாரவினது 2023.09.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே சமர்ப்பித்தார்.

(4) மாவனல்ல, ரன்திவல, எஃப் 1/62 இல் வதியும் திருமதி ஐ.ஆர்.பி. மெனிகேயினது 2023.11.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சாரதீ துஷ்மந்த சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சமூகப் பாதுகாப்பு உதவுதொகை (திருத்தம்):** நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2024 பெப்ரவரி 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**அமர்வு நிறுத்தம்**

மு.ப. 9.57 மணி

பி.ப. 10.55 மணிவரை அமர்வு நிறுத்தப்பட்டது

பி.ப. 10.55 மணிக்கு

அமர்வு மீண்டும் ஆரம்பமாகியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.

**6. நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டிற்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

" இச்சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

"சட்டமூலம் பற்றிய இரண்டாம் மதிப்பீடு பற்றிய விவாதம் ஆரம்பிக்கபட வேண்டும்" எனும் பிரேரணை சபைக்கு விடப்பட்டு சார்பாக 83: எதிராக 50 பேரும் வாக்களித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2) (ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையினைப் பயன்படுத்தி நூற்றி இருபத்தாறு (126) பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| G 001. Pavithradevi Wanniarachchi | Yes |
| G 002. Nimal Siripala De Silva | Yes |
| G 003. Chamal Rajapaksa | Yes |
| G 004. Mahinda Rajapaksa | Yes |
| G 005. Prasanna Ranatunga | Yes |
| G 006. Susil Premajayantha | Yes |
| G 007. Dinesh Gunawardena | Yes |
| G 011. Keheliya Rambukwella | Yes |
| G 012. Mahinda Amaraweera | Yes |
| G 013. Wijeyadasa Rajapakshe | Yes |
| G 017. Vidura Wickramanayaka | Yes |
| G 018. Kanchana Wijesekera | Yes |
| G 020. Tiran Alles | Yes |
| G 022. Nalin Fernando | Yes |
| G 028. Janaka Wakkumbura | Yes |
| G 029. Shehan Semasinghe | Yes |
| G 030. Kanaka Herath | Yes |
| G 031. Thenuka Vidanagamage | Yes |
| G 032. Pramitha Bandara Tennakoon | Yes |
| G 033. Lasantha Alagiyawanna | Yes |
| G 034. Rohana Dissanayaka | Yes |
| G 036. Arundika Fernando | Yes |
| G 037. Vijitha Berugoda | Yes |
| G 040. Tharaka Balasuriya | Yes |
| G 041. Indika Anuruddha Herath | Yes |
| G 042. Siripala Gamalath | Yes |
| G 043. Anuradha Jayaratne | Yes |
| G 045. D.V. Chanaka | Yes |
| G 046. Sisira Jayakody | Yes |
| G 047. Piyal Nishantha De Silva | Yes |
| G 048. Prasanna Ranaweera | Yes |
| G 049. D. B. Herath | Yes |
| G 050. Shasheendra Rajapaksa | Yes |

| | |
|---|---|
| G 051. Seetha Arambepola | Yes |
| G 052. Shantha Bandara | Yes |
| G 053. K. Kadder Masthan | Yes |
| G 054. Asoka Priyantha | Yes |
| G 057. Suren Raghavan | Yes |
| G 059. Sivanesathurai Santhirakanthan | Yes |
| G 061. Anupa Pasqual | Yes |
| G 064. Gamini Lokuge | Yes |
| G 065. Vajira Abeywardena | Yes |
| G 067. C. B. Rathnayake | Yes |
| G 068. S. M. Chandrasena | Yes |
| G 069. Mahindananda Aluthgamage | Yes |
| G 072. Sarath Weerasekara | Yes |
| G 076. Kapila Athukorala | Yes |
| G 079. Jayantha Ketagoda | Yes |
| G 080. Sampath Athukorala | Yes |
| G 082. U. K. Sumith Udukumbura | Yes |
| G 083. Pradeep Undugoda | Yes |
| G 084. Sanjeeva Edirimanna | Yes |
| G 085. Akila Ellawala | Yes |
| G 086. Jagath Kumara Sumithraarachchi | Yes |
| G 087. Karunadasa Kodithuwakku | Yes |
| G 090. Kokila Gunawardene | Yes |
| G 091. Milan Jayathilake | Yes |
| G 093. Sudarshana Denipitiya | Yes |
| G 094. Isuru Dodangoda | Yes |
| G 095. Premnath C. Dolawatte | Yes |
| G 096. H. Nandasena | Yes |
| G 097. Muditha Prishanthi | Yes |
| G 098. Sudath Manjula | Yes |
| G 099. Mayadunna Chinthaka Amal | Yes |
| G 102. Gunathilaka Rajapaksha | Yes |
| G 103. Upul Mahendra Rajapaksha | Yes |
| G 104. M. Rameshwaran | Yes |
| G 105. Rajika Wickramasinghe | Yes |
| G 106. M. W. D. Sahan Pradeep Withana | Yes |

| | |
|---|---|
| G 107. Madhura Withanage | Yes |
| G 108. D. Weerasingha | Yes |
| G 109. Samanpriya Herath | Yes |
| G 110. Sagara Kariyawasam | Yes |
| G 111. Yadamini Gunawardena | Yes |
| G 112. Manjula Dissanayake | Yes |
| G 113. Ranjith Bandara | Yes |
| G 114. Jayantha Weerasinghe | Yes |
| G 116. Lalith Varna Kumara | Yes |
| O 003. Imthiaz Bakeer Markar | No |
| O 004. Tissa Attanayake | No |
| O 005. Rauff Hakeem | No |
| O 006. Gayantha Karunatilleka | No |
| O 007. Lakshman Kiriella | No |
| O 008. Sajith Premadasa | No |
| O 009. Kumara Welgama | No |
| O 012. Mano Ganesan | No |
| O 015. G.L. Peiris | No |
| O 016. Anura Dissanayaka | No |
| O 018. G. G. Ponnambalam | No |
| O 026. Harsha De Silva | No |
| O 028. R. M. Ranjith Madduma Bandara | No |
| O 029. Dilip Wedaarachchi | No |
| O 030. Niroshan Perera | No |
| O 031. Eran Wickramaratne | No |
| O 032. J. C. Alawathuwala | No |
| O 036. Dullas Alahapperuma | No |
| O 043. Faizal Cassim | No |
| O 044. Ashok Abeysinghe | No |
| O 048. Buddhika Pathirana | No |
| O 049. M. S. Thowfeek | No |
| O 054. Wimal Weerawansa | No |
| O 057. Harini Amarasuriya | No |
| O 058. Govindan Karunakaram | No |
| O 060. S. Noharathalingam | No |
| O 062. Kavinda Heshan Jayawardhana | No |

| | |
|---|---|
| O 064. K. Sujith Sanjaya Perera | No |
| O 065. S. M. Marikkar | No |
| O 066. Imran Maharoof | No |
| O 069. Rohini Kumari Wijerathna | No |
| O 072. M. Udayakumar | No |
| O 073. Jayarathna Herath | No |
| O 074. Duminda Dissanayake | Yes |
| O 075. Chandima Weerakkody | No |
| O 078. M. A. Sumanthiran | No |
| O 083. Rohana Bandara | No |
| O 086. Nalaka Godahewa | No |
| O 088. Sudarshini Fernandopulle | No |
| O 089. Nimal Lanza | Yes |
| O 092. Sarathie Dushmantha | No |
| O 095. Udayana Kirindigoda | No |
| O 101. S. Jagath Samarawickrama | Yes |
| O 107. Wasantha Yapabandara | No |
| O 109. Gamini Waleboda | No |
| O 110. Weerasumana Weerasinghe | No |
| O 111. Gevindu Cumaratunga | No |
| O 112. Charitha Herath | No |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) (இ) இன் பிரகாரம் பாராளுமன்றச் செயலாளர் நாயகம் பின்வரும் பெயர்களைக் கேட்பதன் மூலம் பின்வரும் ஏழு (07 ) பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| Nalaka Bandara Kottegoda | Yes |
| Marjan Faleel | Yes |
| Nalin Bandara Jayamaha | No |
| Dayasiri Jayasekara | No |
| Nayana Wasalathilake | No |
| V. Radhakrishnan | No |
| Upul Galappaththi | No |

“கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்குவாராக” என கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப. 11.41 மணிக்கு கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்கினார்.)

(பி.ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த தலைமை தாங்குவாராக” என கௌரவ தயாசிறி ஜயசேக்கர பிரேரிக்க அதனை கௌரவ கௌரவ நலீன் பண்டார ஜயமஹ அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.08 மணிக்கு கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த தலைமை தாங்கினார்.)

“கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்குவாராக” என கௌரவ ஜே.சீ. அலவத்துவல பிரேரிக்க அதனை கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.55 மணிக்கு கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்கினார்.)

“கௌரவ மொஹமட் முஸம்மில் தலைமை தாங்குவாராக” என கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ அதனை கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.21 மணிக்கு கௌரவ மொஹமட் முஸம்மில் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 4.20 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பாக கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதிலிருந்து விவாதம் 2024 சனவரி 24 ஆம் திகதி புதன்கிழமை மீண்டும் ஆரம்பமாகும்.

**7. இலங்கையில் சட்டக் கல்வியின் மீளாய்வு மற்றும் சீர்திருத்தத்திற்கான விதப்புரைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்ற விசேட குழு :** கௌரவ சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ பின்வருமாறு பிரேரித்தார்,— 1900 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இயற்றப்பட்ட 1900 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சட்டக் கல்விப் பேரவையின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கை சட்டக் கல்லூரி தாபிக்கப்பட்டுப் பராமரிக்கப்படுவதுடன் மூன்று பதவிவழி உறுப்பினர்களையும் நீதி அமைச்சரால் நியமிக்கப்படும் நான்கு உறுப்பினர்களையும் உள்ளடக்கிய ஏழு உறுப்பினர்களைப் பேரவை கொண்டிருக்கின்ற போதிலும்;

பிரதம நீதியரசர், நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டத்துறை தலைமையதிபதி ஆகிய மூன்றுபேர்களும் பதவி வழி உறுப்பினர்களாகச் செயற்படுவதோடு, பதவி வழித் தவிசாளராக பிரதம நீதியரசர் செயலாற்றுகின்ற அதேவேளை, சட்டக் கல்லூரியின் அதிபர் காலத்திற்குக் காலம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுகின்றார்;

அத்துடன் கடந்த இரண்டு தொடக்கம் மூன்று தசாப்த காலப்பகுதியில் கல்லூரியில் அனுமதி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்திருக்கின்ற போதிலும், கல்வியின் நோக்கெல்லை விரிவுபடுத்தப்படவுமில்லை, தேவைப்படும் வசதிகள் வழங்கப்படவுமில்லை என்பதுடன் மாணவர்கள் பின்வரும் வழிமுறைகளினூடாகக் சட்டக் கல்லூரியில் கற்பதற்கான அனுமதியினைப் பெறமுடியும்;

(அ) போட்டிப் பரீட்சைகளின் ஊடாக நேரடியான மாணவர் அனுமதிகள்;

(ஆ) உள்ளூர் சட்ட இளமாணிப் பட்டத்தைப் (எல்எல்பி) பின்வரும் பல்கலைக்கழகங்களில் பூர்த்திசெய்த மாணவர்கள்;

(i) கொழும்பு பல்கலைக்கழகம்

(ii) பேராதனைப் பல்கலைக்கழகம்

(iii) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

(v) ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

(இ) சட்டக் கல்விப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் எல்எல்பி பட்டத்தைப் பூர்த்தி செய்திருக்கும் மாணவர்கள்;

அத்துடன் தற்போது ஏறத்தாழ 7,500 மாணவர்கள் இருக்கின்றபோதிலும், உட்கட்டமைப்பு வசதி பெரும்பாலும் சில தசாப்தங்களுக்கு முன்பு இருந்ததைப் போன்று அதே நிலைமையில் இருப்பதுடன் கல்லூரியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 7,500 ஆக இருக்கின்ற போதிலும் கல்லூரியில் ஒரு நிரந்தர ஆசிரியர் மாத்திரமே காணப்படுவதாலும்;

அத்துடன் சட்டக் கல்வி மற்றும் சட்டக் கல்லூரியின் ஒட்டுமொத்த அலுவல்களின் சீர்திருத்தம் மற்றும் மீள்நோக்கு ஆகியன நீண்ட காலமாகத் தீர்க்கப்படாது எஞ்சியிருப்பதாலும்;

அத்துடன் சட்டக் கல்லூரியிலிருந்து பெறும் தொழில்முறைத் தகமைகளுடன் சேர்த்து சட்டத் தொழிலில் நுழைகின்ற தொழில்முறையானவர்களில் இரண்டு வகையினர் காணப்படுவதாலும்;

(அ) சட்டக் கல்லூரியின் மூன்று பரீட்சைகளிலும் சித்தியடையும் சட்டத்தரணிகள்;

(ஆ) உள்ளூர் அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து எல்எல்பி பட்டத்தைப் பெற்றுள்ள சட்டத்தரணிகள் மற்றும் கல்விசார்ந்தும் தொழில்முறை சார்ந்தும் தகைமை பெற்றிருக்கும் சட்டக் கல்லூரியின் இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியடையும் சட்டத்தரணிகள்;

அத்துடன் பல நாடுகளில் கடந்த சில தசாப்த காலங்களில் சட்டக் கல்வியின் நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டிருப்பதுடன், சட்டக் கல்விக்கு பல புதிய பாடங்களும் துறைகளும் சேர்க்கப்பட்டிருப்பதாலும்;

சட்டக் கல்வியை விரிவுபடுத்துவதற்கான காலத்தின் தேவை ஒன்று காணப்படுவதுடன் நடைமுறையிலுள்ள தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்கு புதிய சட்டக் கட்டமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டுமென்ற காரணத்தினாலும் இலங்கையில் சட்டக் கல்வி பற்றிய மீளாய்வு மற்றும் சீர்திருத்தத்திற்கான விதப்புரைகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்ற விசேட குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:—

(அ) சட்டத் தொழில்முறையானவர்களுக்கான சட்டக் கற்கைகள் தொடர்பான அரச கொள்கை மற்றும் சட்டத் தொழில் தொடர்பாகத் தேவைப்படுத்தப்படும் நியமங்களை வகுத்தல்;

(ஆ) சட்டத் தொழில்முறையானவர்களுக்கான சட்டக் கல்வியை ஒழுங்குபடுத்து வதற்கான ஆளுகைச் சபை ஒன்றைத் தாபிப்பதற்கான கொள்கை மற்றும் சட்ட கட்டமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்துதல்;

(இ) சட்டக் கல்வி பற்றிய ஆளுகைச் சபைக்கு நியமிக்கப்படவிருக்கும் உறுப்பினர்களுக்கான நியமம் ஒன்றை அறிமுகப்படுத்துதல்;

(ஈ) பின்வருபவை தொடர்பாகப் பிரயோகிக்கப்படவிருக்கும் செயன்முறை ஒன்றை அறிமுகப்படுத்துதல் —

(i) சட்டக் கல்லூரிக்கான அனுமதி மற்றும் அடிப்படைத் தகைமைகள்; அத்துடன்

(ii) சட்டக் கல்லூரிக்கு மாணவர்களை அனுமதிக்கும் நோக்கத்திற்காக சட்டமாணிப் பட்டத்தை அங்கீகரிப்பது தொடர்பாகப் பிரயோகிக்கப் படவிருக்கும் நியமம் ஒன்று.

(உ) நவீன உலகில் பல்வகைப்பட்ட தொழில்முறைத் தேவைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு கல்வித்தொகுதிகள் தொடர்பான நியமம் ஒன்றை அறிமுகப்படுத்துதல்;

(ஊ) சுயாதீனமாகவும் தன்னிறைவாகவும் செயற்படுவதற்கான மாதிரி ஒன்றை அறிமுகப்படுத்துதல்; மற்றும்

(எ) தொழில்முறைச் சட்டக் கற்கைகள் மற்றும் நடைமுறை பற்றிய விருத்தி மற்றும் தரம் ஆகியவற்றிற்கான வேறு ஏதேனும் இடைநேர்விளைவான விடயம்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளை 101 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழுவானது பதினைந்திற்கும் (15) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) மேற்படி விடயங்கள் தொடர்பில் விரிவான ஆய்வினை மேற்கொள்வதற்காக குழு அவசியமென தீர்மானிக்கும் வகையில், குழுவின் முன் தோன்றுமாறு எவரேனும் ஆளை அழைப்பதற்கும், ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவை சமர்ப்பிக்குமாறு பணிப்பு விடுப்பதற்கும், அத்தகைய அனைத்து சாட்சிகளையும் எழுத்து மூலமாகவோ, வாய்மூலமாகவோ பெற்றுக்கொள்வதற்கும்;

(இ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஈ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும், கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழுவானது அதனது முதல் கூட்டத்திலிருந்து ஆறு (06) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படும் அத்தகைய மேலதிக ஒரு காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்கு அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. இதயத்துடன் இதய நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் :** பரிசீலனைக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

''சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**9. ஸ்ரீ லங்கா பெப்டிஸ்ட் சங்கம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் :** பரிசீலனைக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

"சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**10. ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் :** பரிசீலனைக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

"சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**11. சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் :** பரிசீலனைக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

"சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**12. தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் :** பரிசீலனைக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

"சட்டவாக்க நிலையியற் குழுவில் செய்யப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**13. தெதிகம ஸ்ரீ மைத்திரீ பிரக்ஞார்த்த பௌத்த கல்வி தஹம் சபாவ (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்று பிரதி சபாநாயகரால் 53 (3) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**14. சவீர மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்று பிரதி சபாநாயகரால் 53 (3) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**15. பவித்ரா வன்னியாரச்சி சகுர்த மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என கல்வி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்று பிரதி சபாநாயகரால் 53 (3) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**16. சட்டமூலத்தை மீளப் பெறுவதற்கான அனுமதி:** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— இன்றைய தின ஒழுங்குப் பத்திரத்தில் 24 ஆம் விடயமாகக் காணப்படும் பின்வரும் சட்டமூலத்தை மீளப்பெறுவதற்கு அனுமதி வழங்கப்படுமாக:-

"பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம்"

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**17. ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்ற சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம், பி.ப. 4.36 மணிக்கு, பிரதிச் சபாநாயகரால் 2024 சனவரி 24 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.